சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
அ.வ.எண்.88/2019

வாக்குமூலம்: வா.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்லத்துரை | த/பெ. | : பசுபதி |
| கிராமம் | : பாலசமுத்திரம் | வேலை | : கிராம நிர்வாக அலுவலர் |
| வட்டம் | : பழனி | வயது | : 39 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 12.09.2023 |

1973ம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ம் நாள் அளித்த சாட்சியம்.

முதல் விசாரணை: நான் பாலசமுத்திரம் கிராம நிர்வாக அலுவலராக கடந்த 01.07.2023ம் தேதியிலிருந்து பணியாற்றி வருகிறேன். தாவாச்சொத்தை நான் நேரில் பார்த்தேன். புல எண்.829/9 என்பது வாதிகள் வகையறா பெயரில் உள்ளது. புல எண்.829/10 என்பது வீதி என கிராம கணக்கில் உள்ளது. புல எண்.829/12 என்பது வீதி என்றுதான் கிராம கணக்கில் உள்ளது. புல எண்.829/58 என்பது ஆறுமுகம் மகன் கருப்புச்சாமி என்பவர் பெயரில் பட்டா உள்ளது. மாண்புமிகு உயர்நீதிமன்ற மதுரை கிளையில் புல எண்.829/10 என்பது பொதுப்பாதை என்றும், அதில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அது எனக்கு தெரியாது.

2) வாதிகள் வீட்டிற்கும் 1ம் பிரதிவாதி வீட்டிற்கும் இடையே புல எண்.829/10 பாதை செல்கிறது என்றால் சரிதான். அந்த பாதையில் 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்து இரும்பு கேட் அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். புல எண்.829/10 வழியாக தற்பொழுது பொதுமக்கள் யாரும் பொதுப்பாதையாக பயன்படுத்த முடியாது என்றால் சரிதான்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :- தாவா சொத்தை எனக்கு முன்பு இருந்த கிராம நிர்வாக அலுவலரும் சர்வேயரும் பார்வையிட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட புல எண்.829/9ல் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். புல எண்.829/11 என்பது கோவிலுக்கு பாத்தியப்பட்ட இடமாகும். அதில் தற்போது கோவில் பூசாரி குடியிருந்து வருகிறார். புல எண்.829/58ல் உள்ள வீட்டில் கருப்புச்சாமி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். புல எண்.829/10 பாதையானது

புல எண்.829/12ல் இருந்து ஆரம்பித்து புல எண்.829/31ஏ, 829/31பி ஆகிய சொத்துக்கள் வழியாக புல எண்.829–ல் அமைந்துள்ள பாதையை அடைய முடியும்.

2) புல எண்.829/12ல் தரை மட்டத்திலிருந்து சுமார் 4 அடி உயரத்திற்கு மேடை அமைத்து சுவாமி திருவுருவச்சிலைகள் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கேவிலுக்கு வருட விழா குறித்தோ, அதனை நடத்துபவர்னளின் விபரம் குறித்தோ எனக்கு தெரியாது. புல எண்.829/9ல் உள்ள வீட்டிற்கு தலைவாசல் எத்தனை உள்ளது என்றால் கிழபுறம் ஒன்றும், தென்புறம் நான்கும் உள்ளது. அதில் மேற்கு கடைசியில் உள்ள வாசலானது பிரதிவாதிகள் வைத்துள்ள கேட்டிற்கு உட்பட்டு வருகிறது. தாவா சந்து சம்மந்தமாக வருவாய்த்துறையில் நடந்துவரும் விசாரணை விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u> இவ்வழக்கை பொறுத்து நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவை நான் செயல்படுத்த தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

<u>மறு விசாரணை :–</u> இல்லை.

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.09.12 17:08:42 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.